தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – சித்திரை 13

2010 ஏப்ரல் 26, திங்கட்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல்"

அரிய செயல்களை அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்து முடிக்கும் திறமையுடையவர்கள் பெருமைக்குரியவராவார்கள்.

1. வினாக்கள்–விடைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள், வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

91—

உழவர் சந்தை

***90742—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, காளப்பநாயக்கன்பட்டியில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2010 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேந்தமங்கலம் தொகுதி, காளப்பநாயக்கன்பட்டியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தைத் தனி வட்டமாக அறிவித்த மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் நாமக்கல் மாவட்டத்தினுடைய கழகச் செயலாளர், மத்திய இணையமைச்சர், திரு. காந்தி செல்வன் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கும், எனக்கு ஒத்துழைப்பு கொடுத்த சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ராமசாமி அண்ணன் அவர்களுக்கும் முதலில் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, விவசாயிகள் அதிகமாக விவசாயம் செய்து வருகிற பகுதியாகும். அப்பகுதி மக்கள் தங்களுடைய நிலத்தில் விளைகிற விளைபொருட்களை விற்பனை செய்யவேண்டுமானால் எனது தொகுதியிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள நாமக்கல் உழவர் சந்தைக்குத்தான் எடுத்துச் செல்கிற ஒரு நிலை இருக்கிறது. அதேபோன்று, இராசிபுரம் உழவர் சந்தைக்கும் செல்கிற நிலையிருக்கிறது. அந்த நிலையைப்போக்கி, சேந்தமங்கலம் அல்லது காளப்பநாயக்கன்பட்டி பகுதிகளில் உழவர் சந்தையை ஆரம்பித்துக் கொடுக்குமாறு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள்மூலமாக அன்போடு கேட்டு, அதுகுறித்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளப்பநாயக்கன்பட்டி

2010 ஏப்ரல் 26]

20,558 மக்கள் தொகையைக் கொண்ட ஒரு பேரூராட்சி. சேந்தமங்கலம் வட்டாரத்திலுள்ள 13 கிராமங்களில் 149 எக்டேரில் காய்கறிகள் பயிரிடப்பட்டு, ஆண்டிற்கு 1,300 மெட்ரிக் டன் உற்பத்தியாகின்றது. காளப்பநாயக்கன்பட்டியில் நடைபெறும், வியாழக்கிழமை வாரச் சந்தையிலும், ஒரு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள வெட்டுக்காட்டில் நடைபெறும் செவ்வாய்க்கிழமை வாரச் சந்தையிலும் இந்தக் காய்கறிகளெல்லாம் விற்கப்படுகின்றன. பெரும்பாலும் அங்குள்ள விவசாயிகள் தங்கள் தேவைக்குப் போக மீதமுள்ள காய்கறிகளை சந்தையிலே கொண்டு வந்து விற்பார்கள். ஆகவே, உழவர் சந்தை ஆரம்பித்தால், அது வெற்றிகரமாக நடைபெறுவதற்கான வாய்ப்பில்லை என்று அறியப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உழுபவன் கணக்குப் பார்த்தால் உழக்குகூட மிஞ்சாது' என்பது பழமொழி. ஆனால் உழுபவனுக்கு உற்ற துணையாக, பக்க பலமாக இருந்து அவர்களுக்கு நியாமான விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு தொகுதியிலும் உழவர் சந்தையை ஆரம்பித்ததால் இன்று மகிழ்ச்சியோடு தங்கள் நிலத்தில் விளைகிற விளைபொருட்களையெல்லாம் விற்பனை செய்து வருகிறார்கள். ஆகவே, எனது சேந்தமங்கலம் தொகுதியில் உழவர் சந்தை அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மீண்டும் ஒரு முறை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில், நாமக்கல், திருச்செங்கோடு, இராசிபுரம், குமாரபாளையம், பரமத்திவேலூர், மோகனூர் ஆகிய ஊர்களில் உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன. பொதுவாக, உழவர் சந்தை அமைக்கவேண்டுமானால் தேவையான காய்கறிகள் அங்கு உற்பத்தி செய்யப்படுகின்றனவா என்று தோட்டக்கலைத் துறை விவசாய அலுவலர்கள் ஆய்வு செய்து பார்க்கின்றார்கள். அதேநேரத்தில், காய்கறி விளைந்தாலுங்கூட, உழவர் சந்தைக்குக் கொண்டுவந்தால் அதை வாங்கிப் பயன்படுத்தக்கூடிய நுகர்வோர்கள் நாள்தோறும் எவ்வளவு பேர்

வருவார்கள் என்பதைக் கணக்கிட்டுத்தான், உழவர் சந்தை தொடங்கப்படுகிறது. காய்கறிகள் அதிகமான அளவிலே உற்பத்தியானாலுங்கூட, நுகர்வோர் இல்லையென்றால், அங்கு உழவர் சந்தையைத் தொடங்கி பயன் இருக்காது என்ற காரணத்தின் அடிப்படையிலேதான் உழவர் சந்தை தொடங்கப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே மீண்டும் வலியுறுத்தி கேட்கக்கூடிய காரணத்தினால், மீண்டும் தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண்மைத் துறை அலுவர்களிடத்திலே புதிய தகவல்களைப் பெற்றுப் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வசந்தகுமார், காளப்பநாயக்கன்பட்டி உழவர் சந்தை சம்பந்தமாக நீங்கள் கேட்கப்போகிறீர்களா? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் சந்தைகளை உழவர் பெருமக்களும், விவசாயப் பெருமக்களும் பயன்பெறுகின்ற வகையில்தான், டாக்டர் கலைஞர் அவர்கள் அமைத்தார்கள். ஆனால், உழவர் சந்தைக்கு அதிகாலையிலே மொத்த வியாபாரிகள் சென்று காய்கறிகள் அனைத்தையும் வாங்கிக் கொண்டுபோய் விடுவதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. தமிழக அமைச்சர் பெருமக்களும், முதலமைச்சர் அவர்களும், அதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரவலாகப் பேசப்படுகிறது என்பதற்கெல்லாம் என்னிடத்திலே தகவல் இல்லை. இருந்தாலுங்கூட, உழவர் சந்தையில் திருமண நிகழ்சிக்காக, காய்கறிகள் வாங்கக்கூடியவர்கள் வந்து கேட்டால் வழங்கலாம். அதேபோல, சத்துணவு போடக்கூடிய பள்ளிக்கூடங்களிலேயிருந்து காய்கறிகள் வாங்குவதாக இருந்தால், அவர்களுக்கும் வழங்கலாம் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். வியாபாரிகள் ஒட்டுமொத்தமாக வந்து வாங்க முன்வந்தால், அவர்களுக்கு வழங்கக் கூடாது என்று கண்டிப்பான உத்தரவும் இருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றம் TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2010 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

92—

நீதிமன்ற வளாகம்

***32727—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேட்டூர் நகரிலுள்ள நீதிமன்றங்களை ஒருங்கிணைத்து ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேட்டூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டுவதற்காக, 13-4-2007 அன்றே இந்த மாமன்றத்தில் அறிவித்தோம். அங்கு கட்டுவதற்கு ஏற்ற இடம் கிடைக்காததால் தள்ளிப்போய்க் கொண்டேயிருக்கிறது. விரைவில் அதற்கான ஒரு முடிவு வருமென்று கருதுகிறேன். இப்போது ஒரு குறிப்பிட்ட இடத்தை நீதிமன்றம் கட்டுவதற்கு ஒதுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இடமாற்றம் செய்யப்பட வேண்டும். அது நடந்தால் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்கு அரசு உடனடி நடவடிக்கையினை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மேட்டூரில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், குற்றவியல் நீதிமன்றம்-1, குற்றவியல் நீதிமன்றம்-2 ஆகிய நான்கு நீதிமன்றங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிலும், குறிப்பாக, குற்றவியல் நீதிமன்றம்-1 மற்றும் 2 ஆகியவை மேட்டூர் வட்டத்திற்கும், ஓமலூர் வட்டத்திற்கும் சேர்ந்திருக்கக்கூடிய